இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 77 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 11 – செவ்வாய்க்கிழமை 28 அக்டோபர் 2025 – மதுரை 16 + 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 77 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 11 - Tuesday 28 October 2025 - Madurai 16+10 Pages ₹ 5.00


### தனி மனித நலனைவிட – நாட்டின் நலன்தான் முக்கியம் என்ற உணர்வோடு

# தி.மு.க. - காங்கிரஸ் கொள்கை உறவு நாட்டைக் காக்கும்!

## விருதுநகர் காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ. சொக்கர் இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, அக். 28 -

**“தனி மனிதர்களின் நலனைவிட நாட்டின் நலன்தான் முக்கியம் என்ற உணர்வோடு தி.மு.க. - காங்கிரஸ் கொள்கை உறவு நாட்டைக் காக்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுநகர் காங்கிரஸ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சொக்கர் இல்ல மணவிழாவை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றும் போது உறுதி படக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சொக்கர் அவர்களின் பேரனும், விருது நகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ ராஜா சொக்கர் அவர்களின் மகனுமான சிவராஜா ஸ்ரீ ராஜா - எஸ். சாலுபாரதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-

மிகப்பெரிய அரசியல் பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீராஜா சொக்கர் - திருமதி பூர்ணிமா தம்பதியரின் அருமை மகன் சிவராஜா ஸ்ரீராஜா அவர்களுக்கும், தொழிலதிபர் சரவணன் - சுசிலா தம்பதியரின் அருமை மகள் சாலுபாரதி அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறி இருக்கிறது. இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்று, மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

இந்த மணவிழா நிகழ்ச்சி ஒரு சீர்திருத்த திருமணமாக, சுயமரியாதை உணர்வோடு நடைபெறுகின்ற திருமணமாக நடந்தேறியிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும். இதுபோன்ற சீர்திருத்த திருமணங்கள், சுயமரியாதை திருமணங்கள் 1967க்கு முன்பு நடைபெற்றது என்று சொன்னால், அந்த திருமணங்கள் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தைப் பெறமுடியாத நிலையில் அந்த திருமணங்கள் நடந்தேறி இருக்கிறது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சொக்கர் அவர்களின் பேரனும், விருதுநகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ ராஜா சொக்கர் அவர்களின் மகனுமான சிவராஜா ஸ்ரீ ராஜா – எஸ். சாலுபாரதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

**வணிகர்களுக்காக பாடுபட்டவர் சொக்கர்!**

ஆனால், 1967க்கு பிறகு தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணா முதல மைச்சராகப் பொறுப்பேற்று முதன்முதலாக சட்டமன்றத்தில் முதலமைச்சராக நுழைந்து சீர்திருத்த திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை நமக்கு பெற்றுத் தந்திருக்கிறார். ஆகவே, இன்று நடைபெற்றிருக்கக்கூடிய இந்த் திருமணம் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற நிலையில் நடந்தேறியிருக்கிறது.

நம்முடைய ஸ்ரீராஜா சொக்கர் அவர்கள், விருதுநகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்து அவர் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவரின் தந்தையார் சொக்கர் அவர்கள், விருதுநகர், சிவகாசி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் முக்கிய உறுப்பினராக இருந்து, வணிகர்களுடைய முன்னேற்றத்திற்கு, வணிகர்களுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் அவர் பாடுபட்டிருக்கிறார்; பணியாற்றியிருக்கிறார் என்பது எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

1989ஆம் ஆண்டில் இருந்து நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் தலைவர்களோடு நெருங்கிப் பழகி அவரிடம் பாசத்தோடு, அன்போடு, பண்போடு இருந்து பழகியவர் நம்முடைய சொக்கர் அவர்கள். சட்டமன்றத்தில் அவர் இருந்தபோது, நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றி இருக்கிறேன். அவர் சட்டமன்றத்தில் பேசக்கூடிய பேச்சுக்கள் எல்லாம் நான் ரசித்ததுண்டு. வியந்து எண்ணியதுண்டு. அவர் தொகுதி மக்களுக்காக வாதாடுகின்ற, போராடுகின்ற அந்த காட்சிகள் எல்லாம் நான் பார்த்ததுண்டு.

இன்னொரு நிகழ்ச்சியை கூட நான் சொல்ல வேண்டும். ஒரு முறை சட்டமன்றத்தில் அன்றைக்கு அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த ராமகிருஷ்ணன் என்ற ஒரு அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கையை விவாதித்து அதற்கு பதில் சொல்கின்றபோது, அவர் பேசி முடித்ததற்கு பிறகு சில அறிவிப்புகளை வெளியிட்டார்.

அந்த அறிவிப்புக்களை வெளியிடுகின்றபோது, அதை முழுமையாக படித்தார். அப்படி படிக்கின்ற நேரத்தில், படித்து முடித்ததை மறுபடியும் படிக்க ஆரம்பித்தார். காரணம் என்னவென்று கேட்டால்,

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### கொள்கை உறவாக வலுப்பெற்ற நட்பு!



**இன்றைக்கு காங்கிரஸ் கட்சியின் இளந்தலைவராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய அருமை சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் தனிப்பட்ட முறையில் என் மீது காட்டுகின்ற அன்பை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது. ‘‘மற்ற அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் பேசுகின்ற போது, விளிக்கின்ற போது யாரையும் நான் சகோதரர் என்று சொன்னது கிடையாது; ஆனால், ராகுல் காந்தியை பற்றி மட்டும் நான் விளிக்கின்றபோது அருமை சகோதரர் என்று நான் சொல்வதுண்டு.**

**காரணம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், அவர் என்னை அண்ணன், மூத்த அண்ணன் – எப்போது பார்த்தாலும், என்னிடம் ஃபோனில் பேசுகின்ற போதும் சரி – நேரடியாக பார்க்கும் போதும் மை டியர் பிரதர் என்று தான் சொல்வார். அதையெல்லாம் என்னால் மறக்க முடியாது.**

---

### வட மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக். 28 -

சென்னை வங்கக்கடலில் கடந்த 24ந்தேதி காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது. இது தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தாழ்வு மண்டலம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் என்ற நிலைகளை கடந்து, தற்போது புயலாக வலுவடைந்துள்ளது. இந்த புயலுக்கு ‘மோந்தா’ என பெயரிடப்பட்டு இருக்கிறது. மணிக்கு 16 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வரும் மோந்தா புயல், தற்போது சென்னைக்கு 550 கி.மீ. தொலைவில் நிலை கொண்டுள்ளது.



இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை அல்லது இரவு நேரத்தில் ஆந்திர கடலோரப் பகுதிகளில் மசூலிப்பட்டினம் கலிங்கப்பட்டினம் இடையே காக்கிநாடாவுக்கு அருகில் புயல் கரையை கடக்க இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. ஆந்திராவுக்கு புயல் செல்வதால், தமிழ்நாட்டுக்கு மழைக்கான வாய்ப்பு இருக்காதோ? என்ற பேச்சு இருக்கிறது. ஆனால் வட மாவட்டங்களில் சில இடங்களில் கன முதல் மிக கனமழை வரை பதிவாக வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### பீகார் தேர்தல்:

### 2,616 வேட்பாளர்கள் போட்டி!

பாட்னா, அக். 28 -

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் மொத்தம் 2616 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அங்கு பிரசாரம் தீவிரம் அடைந்துள்ளது. 243 உறுப்பினர்கள் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடக்கிறது. நவ.6ஆம் தேதி 121 தொகுதிகளுக்கும், நவ.11 ஆம் தேதி 122 தொகுதிகளுக்கும் தேர்தல் நடக்கிறது. நவ.14ஆம் தேதி ஓட்டு எண்ணிக்கை நடக்கிறது.

பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான மனுத்தாக்கல் முடிந்து விட்டதால் அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் களம் இறங்கி உள்ளனர். பிரதமர் மோடி நேற்று அங்கு பிரசாரம் மேற்கொண்டார். இந்தியா கூட்டணி கட்சியினரும் பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

---

### ‘இந்தியா’ கூட்டணி ஆட்சிக்கு வந்தால்

## வக்பு சட்டம் குப்பைத் தொட்டியில் வீசப்படும்!

### தேஜஸ்வி யாதவ் பிரசாரம்!

கதிஹார், அக். 28 -

பீகாரில் அடுத்த மாதம் சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளதையொட்டி, இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளரான ராஷ்டிரிய ஜனதா தள (ஆர்ஜேடி) தலைவர் தேஜஸ்வி யாதவ் நேற்று முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் கதிஹார், கிஷன்கஞ்ச், அராரியா மாவட்டங்களில் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் கூறியதாவது:

ஆர்ஜேடி தலைவரான எனது தந்தை லாலு பிரசாத் வகுப்புவாத சக்திகளுடன் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளவில்லை. ஆனால், முதல்வர் நிதிஷ்குமார் அத்தகைய சக்திகளை எப்போதும் ஆதரிக்கிறார். அதனால்தான் ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் துணை அமைப்புகள் மாநிலத்திலும் நாட்டிலும் வகுப்புவாத வெறுப்பை பரப்புகின்றன. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் வக்பு சட்ட திருத்தத்தை நாங்கள் குப்பை தொட்டியில் வீசி எறிவோம். இந்தத் தேர்தல் அரசியலமைப்பு, ஜனநாயகம் மற்றும் சகோதரத்துவத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டம்.

முடிதிருத்தும் தொழிலாளிகளுக்கு ரூ.5 லட்சம் வட்டியில்லா கடன் வழங்குவோம். சமீபத்தில் அமித் ஷா பீகாருக்கு வந்தபோது, தேர்தலில் போட்டியிட விட மாட்டேன் என்று எங்களை மிரட்டினார். நான் போராடுவேன், நான் வெற்றி பெறுவேன். நாங்கள் பீகாரிகள், உண்மையான பீகாரிகள், வெளியாட்களுக்கு நாங்கள் பயப்படுவதில்லை. ஒரு பீகாரி மற்ற அனைவரையும் விட வலிமையானவர்.

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் கூறினார்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி

## சென்னை மாநகரில் வெள்ள நிவாரணப் பணிகள் தீவிரம்!

### தயார் நிலையில் 106 சமையல் கூடங்கள்!

சென்னை, அக். 28 -

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுகின்றன. இந்த மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 22.10.2025 முதல் 27.10.2025 வரை மொத்தம் 4 இலட்சத்து 9 ஆயிரத்து 650 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 2000 க்கு மேற்பட்ட மோட்டார் பம்புகள் ஆங்காங்கே தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 457 மர அறுவை இயந்திரங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்காமல் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு மழை வெள்ளம் காரணமாக ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால், 150 இணைப்புகளுடன் கூடிய 1913 எனும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்குப் புகார்கள் தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புகார்கள் மூலமும் சமூக ஊடகங்களில் வரும் புகார் மீதும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. மேலும், கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வடகிழக்குப் பருவமழையால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும் சென்னை குடிநீர் வாரியம் 2,149 களப்பணியாளர்களும் தயார் நிலையில் உள்ளனர்.

சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 15.10.2025 முதல் குடிநீர் வழங்கப்படுகிறது. 26.10.2025 அன்று மட்டும் 2828 நடைகள் வாயிலாக தடையில்லாமல் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

---

### இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்!

**தென் ஆப்பிரிக்க அணி அறிவிப்பு!**

கேப்டவுன், அக். 28 –

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர்களில் விளையாட உள்ளது.



இதில் இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற உள்ளது. அதன்படி இந்தியா தென் ஆப்பிரிக்கா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 14ம் தேதி ஈடன் கார்டனில் தொடங்க உள்ளது. இது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் என்பதால் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.